**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திருமதி.G.தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கமுதி.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.(மு.கூ.பொ.)**

**2026 ம் வருடம் மே மாதம் 26 ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.85/2023**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | வாலிநோக்கம் காவல் நிலையம் குற்ற எண் - 54/2023. |
| | **1 வது எதிரியின் விபரம்** | |
| 2. | பெயர் | செல்லத்துரை |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | பொன்ராஜ் |
| 4. | தொழில் | - |
| 5. | முகவரி | மடத்துாரணி, வாலிநோக்கம், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் தாலுகா. |
| 6. | வயது | 45/2023 |
| | **2 வது எதிரியின் விபரம்** | |
| 2. | பெயர் | தாமஸ் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | பொன்ராஜ் |
| 4. | தொழில் | - |
| 5. | முகவரி | மடத்துாரணி, வாலிநோக்கம், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் தாலுகா. |
| 6. | வயது | 43/2023 |
| 7. | சம்பவ நாள் | 05.06.2023 ம் தேதி 14.00 மணி |
| 8. | புகார் தேதி | 08.06.2023 ம் தேதி 12.00 மணி |



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:04:09 +0530

<table>
<tr><td>9.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள்</td><td>11.06.2023</td></tr>
<tr><td>10.</td><td>பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>நிலையப்பிணை (11.06.2023)</td></tr>
<tr><td>11.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்</td><td>07.07.2023</td></tr>
<tr><td>12.</td><td>விசாரணை துவங்கப்பட்ட நாள்</td><td>19.05.2026</td></tr>
<tr><td>13.</td><td>விசாரணை முடிவுற்ற நாள்</td><td>26.05.2026</td></tr>
<tr><td rowspan="2">14.</td><td>சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ்</td></tr>
<tr><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323 மற்றும் பிரிவு 4 of TNPHW Act ன் கீழ்</td></tr>
<tr><td>15.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை</td></tr>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td><table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>19.05.2026</td><td>19.05.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>19.05.2026</td><td>19.05.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>17.</td><td>எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>26.05.2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>U/s.320 Cr.P.C. Petition filed and dismissed in M.P.No.01/2026, Dated: 19.05.2026.</td></tr>
<tr><td>20.</td><td>எதிரிகள்/குற்றமுறையீட்டாளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>U/s.311 Cr.P.C. Petition filed and allowed in M.P.No.03/2026, Dated: 19.05.2026.</td></tr>
<tr><td>21.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2) BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>இல்லை</td></tr>
</table>



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:04:16 +0530

| | | |
|---|---|---|
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.J.ஆலன் ராயன் |
| 23. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.M.M.கண்ணன் |
| 24. | எதிரிகளின் கூற்று | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார். |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 26.05.2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 26.05.2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:04:22 +0530

இந்த வழக்கு 07.07.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.05.2026ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 திரு.J.ஆலன் ராயன் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.M.கண்ணன் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று (26.05.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

**<u>தீர்ப்புரை</u>**

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. வழக்கின் புகார்தாரர் மற்றும் 1வது எதிரியின் மகளான சுபா என்பவர் தங்களது பெற்றோரின் விருப்பம் இல்லாமல் முனீஸ் என்பவரை காதலித்து திருமணம் செய்ததால் 1வது எதிரி தனது குடும்பத்தாரிடம் யாரும் தனது மகள் சுபாவை பார்க்கக்கூடாது என கூறியுள்ளார் என்றும், இந்நிலையில், கடந்த 05.06.2023ம் தேதி புகார்தாரர் சிக்கலுக்கு காய்கறி வாங்க சென்றவர் வண்ணாவூரணி சென்று அவரது மகளை பார்த்து விட்டு வந்ததாக 2வது எதிரி 1வது எதிரியிடம் போன் மூலம் கூறியதால் 1வது எதிரி அன்று மதியம் 02.00 மணிக்கு மடத்துாரணியில் உள்ள தனது வீட்டில் வைத்து புகார்தாரரைப் பார்த்து தேவிடியா மகளே நீ உன் மகளை பார்க்க போயிருக்க என சொல்லி விறகு கம்பை வைத்து புகார்தாரரின் இடது கையில் அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தியும், வலி தாங்காமல் வீட்டை விட்டு ஓடிய புகார்தாரரை 2வது எதிரி தாமஸ் என்பவர் ஒரு கம்பை எடுத்து வந்து நில்லுடி தேவிடியா முண்ட என சொல்லி புகார்தாரரின் முதுகில் ஓங்கி அடித்து சிறுகாயத்தை ஏற்படுத்தி பெண்ணுக்கு எதிரான வன்கொடுமை செயலில் ஈடுபட்ட குற்றத்திற்காக எதிரிகள் மீது இ.த.ச.

பிரிவுகள் 294(b), 323 பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் வாலிநோக்கம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அவருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவர்களுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207 ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 07.07.2023 ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு. 240(1)ன் படி எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, பிரிவு 4 of TNPHW Act ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவியபோது எதிரிகள் அவர் மீதான குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் அ.சா.1 மற்றும் எதிரிகள் சமாதானமாக சென்று விட்டதாக கு.வி.மு.ச. பிரிவு 320 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சமரசம் செய்துகொள்ள முடியாத குற்றம் என்பதால் எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சமரச மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.2** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:04:32 +0530

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>

i. அரசுத் தரப்பில் மொத்தம் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களில் அ.சா.1 பிறழ்சாட்சியாகி சாட்சியம் அளித்துள்ளார். அசா.2 வாலிநோக்கம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் ஆவார். இவர் தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்து, குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள் பணிமாறுதலாகி சென்று விட்டபடியாலும், அவர் என்னுடைய காவல் நிலையத்தில் பணிபுரிந்ததால் அவரது கையொப்பம் நன்கு தெரியும் என்பதன் அடிப்படையில் வழக்கு கோப்பை பார்த்து அவருக்காக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், கடந்த 08.06.2023 ம் தேதி மதியம் 12.00 மணிக்கு வாலிநோக்கம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது நிலைய மனு ரசீது எண்.116/2023 யை பார்வையிட்டு புகாரின் தன்மைக்கேற்ப மடத்தூரணி கிராமத்தைச் சேர்ந்த செல்லத்துரை மனைவி தேவகனி என்பவரிடம் மீண்டும் புகார் வாக்குமூலம் **(அ.சா.ஆ.2)** பெற்று நிலையக் குற்ற எண்.54/2023 பிரிவுகள் 294(b), 323 இ.த.ச மற்றும் 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.3)** பதிவு செய்துள்ளார் என்றும், அன்றே 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வீரசெல்வி மற்றும் பாலம்மாள் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் **(அ.சா.ஆ.4)** மற்றும் மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.5)** தயார் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii. மேலும் பட்டியல் சாட்சிகளான தேவகனி, ஜீவந்தம், முனியம்மாள், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், இந்த வழக்கில் விசாரணைக்காக நிலையம் ஆஜரான 1 வது எதிரியை நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க இருநபர் ஜாமீனில் நிலையப்பிணையில் விடுவித்துள்ளார் என்றும், 2 வது எதிரியை மடத்தூரணியில் உள்ள எதிரியின் வீட்டில் வைத்து கைது நிலையம் கொண்டு வந்து தக்க இருநபர் ஜாமீனில் நிலையப்பிணையில் விடுவித்துள்ளார் என்றும், அ.சா.1 க்கு சிகிச்சையளித்த இராமநாதபுரம் அரசு



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:04:37 +0530

மருத்துவமனை மருத்துவர் திரு.முகமது அமீர்கான் என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்து அவர் அ.சா.1க்கு அளித்த விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **(அ.சா.ஆ.6)** பெற்றுள்ளார் என்றும், இந்த வழக்கில் இறுதியாக புலன் விசாரணை முடித்து 19.06.2023ம் தேதி எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323 இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் குற்ற இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

iii. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)ன் படி கேள்விகள் கேட்க எதிரிகள் சாட்சியங்களை பொய் என்றும், தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்ததன் பேரில் எதிரிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

i. எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7. **அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:-**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரிகளால் தனக்கு காயம் ஏற்படவில்லை என்றும், கூட்டத்திற்குள் சென்று கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்திற்கு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாகவும், தான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் தன்னிடம் வெள்ளைத்தாளில் கையொப்பம் **(அ.சா.ஆ.1)** பெற்றதாக கூறியதால் அரசுத் தரப்பில் பிறழ்சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகள் மற்ற

சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி அ.சா.1ன் சாட்சியமும் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

ii. இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்ட சார்பு ஆய்வாளர் அவர்கள், இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணை செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் அவர்கள் கடந்த 08.06.2023ம் தேதி மதியம் 12.00 மணிக்கு நிலையப்பொறுப்பில் இருந்தபோது நிலைய மனு ரசீது எண்.116/2023யை பார்வையிட்டு புகாரின் தன்மைக்கேற்ப அ.சா.1னிடம் மீண்டும் புகார் வாக்குமூலம் **(அ.சா.ஆ.2)** பெற்று குற்ற எண்.54/2023 பிரிவுகள் 294(b), 323 இ.த.ச மற்றும் 4 of TNPHW Actன் கீழ் வழக்குப் பதிவு செய்து சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் **(அ.சா.ஆ.4)** மற்றும் மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.5)** தயார் செய்து சாட்சிகள் இருவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii. மேலும் அ.சா.2ன் சாட்சியத்தின்படி சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை கைது செய்து தக்க இருநபர் பிணையில் விடுவித்து, அ.சா.1க்கு சிகிச்சையளித்த மருத்துவரை விசாரித்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று **(அ.சா.ஆ.6)** பெற்று, அத்துடன் புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கையை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

iv. ஆனால் அ.சா.1 அரசுத் தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் அ.சா.2ன் சாட்சியத்தால் எவ்வித பலனும் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, பிரிவு 4 of TNPHW Actன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில்

அளிக்கிறது.

v. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, பிரிவு 4 of TNPHW Act ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரிகளின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

vi. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026 ம் ஆண்டு மே திங்கள் 26 ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.26 17:04:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.(மு.கூ.பொ.)

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திருமதி.தேவகனி |
| அ.சா.2 | திரு.வழிகாத்தான் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 08.06.2023 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.2 | 08.06.2023 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | 08.06.2023 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 08.06.2023 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | 08.06.2023 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 05.06.2023 | விபத்துப்பதிவேடுடன் கூடிய காயச்சான்று |

<u>அரசு தரப்பு சான்றுபொருள்:-</u> இல்லை

<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:-</u> இல்லை

<u>குறிப்பு :-</u>

1. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.05.26 17:05:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.(மு.கூ.பொ.)